## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் உள்ள அனைத்து மாவட்ட நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனத்திற்கான ஓட்டுநர்களுக்கான தொகுப்பூதியத்தினை ரூ.8000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்குதல் கூடுதல் தொகை ரூ.3,84,000/– ஒப்பளிப்பு வழங்கி – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.32

நாள்:26–10–2016
துன்முகி, ஐப்பசி 10,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:–

1. அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 17–07–2013.
2. அரசாணை(நிலை) எண்.75, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–11–2014.
3. அரசாணை(1டி) எண்.26, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 04–09–2015.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2193/ இவாததி–1 /2015, நாள் 11.09.2015 மற்றும் 16.06.2016.

-----

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 0 முதல் 6 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்க அனுமதி மற்றும் ரூ.4.49 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கென 32 மாவட்டங்களில், 2014–2015 ஆம் நிதியாண்டில் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக, ரூ.38,12,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கென 32 மாவட்டங்களில், 2015–2016 ஆம் நிதியாண்டில் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக, ரூ.82,28,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், 32 மாவட்டங்களிலும், நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்களுக்கான ஊர்தி ஓட்டுநர் மற்றும் உதவியாளர்களுக்கு தற்போது தொகுப்பூதியமாக ரூ.8000/– மற்றும் ரூ.5000/– வழங்கப்பட்டு வருகிறது என்றும், 32 மாவட்டங்களில் இதுவரை 14 மாவட்டங்கள் தவிர மற்ற 18 மாவட்டங்களில் ஓட்டுநர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்றும், இதற்கு ஓட்டுநர் தொகுப்பூதியம் மிகவும் குறைவாக இருப்பதாக தெரிவிப்பதாக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் தெரிவிக்கின்றனர் என்றும், இத்திட்டம் இந்தியாவிலேயே முன் மாதிரியான திட்டம் எனவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட திட்டம் எனவும், இத்திட்டத்திற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருப்பதால் இத்திட்டம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற ஓட்டுநர் மற்றும் உதவியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியது அவசியமாகிறது என்றும், தமிழ்நாட்டில் உள்ள 12 மாநகராட்சிகளில் (சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி, ஈரோடு, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல்) உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் உள்ள நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனத்திற்கான ஓட்டுநர் மற்றும் உதவியாளர்களுக்கு முறையே ரூ.15,000/–

மற்றும் ரூ.5,000/– எனவும், மற்ற 20 மாவட்டங்களில் உள்ள ஓட்டுநர் மற்றும் உதவியாளர் முறையே ரூ.12,000/– மற்றும் ரூ.5,000/– எனவும் தொகுப்பூதியத்தை 01.04.2016 முதல் உயர்த்தி வழங்கிட அரசாணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்த அரசு, நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்களுக்கான ஊர்தி ஒட்டுநர்கள் மேற்கொள்ளப்படும் பணிகள், தற்போதுள்ள நிதிநிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாநகராட்சி பகுதிகள் மற்றும் ஏனைய பகுதிகள் என்ற பாகுபாடின்றி அனைத்து மாவட்ட நடமாடும் சிகிச்சை பிரிவுகளில் ஓட்டுநர் பணியிடத்திற்கான தொகுப்பூதியத்தை மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/– ஆக 01–10–2016 முதல் உயர்த்தி வழங்கியும், இதற்கென தேவைப்படும் கூடுதல் தொகையான ரூ.3,84,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன்– 101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம்–MV மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்–33 – தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 ஒப்பந்த ஊதியம்.''

(கு.தொ.கு 2235 02 101 MV 3340)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.3,84,000/–க்கான நிதியொதுக்கம் 2016–17–ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இச்செலவினத்தை 2016–17–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவையும் தவறாமல் நிதி(சந)த் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.54973/நிதி(சந)/2016, நாள் 21.10.2016–ன் பெற்ற இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1016 (ஆயிரத்து பதினாறு) உடனும் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**<u>நகல்:–</u>**

நிதி (சந/வ.செ.பொ–II) த் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(ச,ந(ம) ச.தி) அவர்களின் சிறப்பு தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.